**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 11** **நாள்: 25.01.2018**

**8வது தேசிய வாக்காளர் தின நிகழ்ச்சி பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்றது**

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் இன்று (25.01.2018) தேசிய வாக்காளர் தின நிகழ்ச்சி நடைபெற்றது. 8வது வாக்காளர் தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்தத் தினத்தில் தான் இந்திய தேர்தல் ஆணையம் 1950ல் நிறுவப்பட்டது. இந்த ஆண்டின் குறிக்கோள் "அணுகத்தக்க தேர்தல்கள்" (Accessible Elections).

வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், வாக்காளர்களாக தங்களது பெயர்களை பதிவு செய்வதன் அவசியம் குறித்தும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2011ம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 25ம் நாள் தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இன்று 8வது தேசிய வாக்காளர் தினம் பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்றது.

இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் திரு.ஓம் பிரகாஷ் ராவத் அவர்களின் தேசிய வாக்காளர் தின செய்தி காணொலி காட்சியின் மூலமாக ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை வாசிக்க அனைவரும் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, புதிய வாக்காளர்களுக்கு வண்ண வாக்காளர் அடையாள அட்டையினை, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.ஆர்.முத்துகுமாரசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**